**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.40/2021- PW-3**

| | |
|---|---|
| Name | திரு.மாரிமுத்து |
| Father Name | திரு.ரங்கசாமி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 22.09.2025.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் சொத்து தகராறு பற்றி சொல்லப்பட்டுள்ளது. வழக்கு சொத்துகள் மருதமங்கலம் மற்றும் கனியனூரில் உள்ளது. கந்தனுக்கு பேரன் தான் மாரிமுத்து. கந்தனுக்கு எந்த ஊரில் எவ்வளவு சொத்துகள் இருந்தது என்று எனக்கு தெரியாது. கந்தன் எவ்வளவு சொத்து வைத்திருந்தார் என்றும், எந்தெந்த சொத்துகளை பராதீனம் செய்தார் என்றும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் கந்தன் நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். கிருஷ்ணன் என்பவரின் மனைவி தான் பொன்னம்மாள். எந்த வருடம் சின்னக்கண்ணு என்பவர் மருதமங்கலம் கிராமத்திற்கு வந்தார் என்று எனக்கு தெரியாது. சின்னக்கண்ணு என்பவரால் எந்தெந்த வருடத்தில் எந்தெந்த சொத்து வாங்கப்பட்டது என்று என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். சின்னக்கண்ணு, பொன்னம்மாள் ஆகியோர் எப்போது இறந்தார்கள் என்று என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். மாரிமுத்துவிற்கு 8 வயது இருக்கும் போது அவரது தந்தை கிருஷ்ணன் காலமானார். வாதிகள் வழக்கு சொத்துகளை அனுபவம் செய்வதை காண்பிக்க அடங்கல் கணக்கு நான் பார்க்கவில்லை. வழக்கு விவரம் எனக்கு தெரியாமல் வாதிகள் சொல்லிக்கொடுத்தபடி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Court,
Ranipet